# HDFC BANK

நான்கு தசாப்தங்களாக பல்வேறு நிதித் தீர்வுகள் ஊடாக இலங்கை மக்களின் வீட்டு கனவை நிறைவேற்றுவதோடு வர்த்தக சமூகத்தினருக்கு நிதி உதவிகளை அளித்து நாட்டின் நலனுக்காக தம்மை அர்ப்பணித்துள்ள வங்கியுடன் உங்களின் வங்கியியல் தொழிலை உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்கான அரியதொரு வாய்ப்பு கிட்டியுள்ளது.

HDFC வங்கியில் கீழ் காணும் பதவிகளுக்கு திறமையான, செயல்திறன் மிக்க சாதகமான நோக்கை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நீதிமன்ற எழுதுவினைஞர்/நொத்தாரிஸ் எழுதுவினைஞர் , தரம் VI (1) - மட்டக்களப்பு கிளை/ ஹோமாகம கிளை (02 வெற்றிடங்கள்)**
**COURT CLERK/NOTARY CLERK, GRADE VI (1) - BATTICALOA BRANCH / HOMAGAMA BRANCH (02 VACANCIES)**

**பிரதான பொறுப்புகள்:**

- வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய பத்திரங்களை தட்டச்சு செய்தல்.
- ஏற்புடைய காணி பதிவு செய்யும் நிறுவனங்களுடன் இணைந்து உரித்துகளை பரிசோதித்தல்
- நீதிமன்றங்களுக்கு சென்று ஏற்புடைய தகவல்கள் மற்றும் வழக்கு விபரங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளுதல்.
- நீதிமன்ற, காணி பதிவு செய்யும் நிறுவனங்கள் மற்றும் வேறு எந்தவொரு நிறுவனமாக இருந்தாலும் அவற்றுக்கு செல்லுதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றுக்கு பத்திரங்களை ஆற்றுப்படுத்தல்.
- தரவுகள் முகாமைத்துவக் கட்டமைப்பை இற்றைப்படுத்தால் (DMS)

**தகைமைகள்**

- க.பொ.த உயர் தரப் பரீட்சையில் 03 சாதாரண சித்திகளுடன் (பொது ஆங்கிலம் தவிர) சித்தியடைந்திருத்தல்
- க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 06 சாதாரண சித்திகள் மற்றும் கணிதம், சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கிலம் உட்பட 05 திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்
- MS Office தொடர்பான அறிவை கொண்டிருத்தல்.
- *சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சிறப்பாக தட்டச்சு செய்யக்கூடிய ஆற்றலை கொண்டிருத்தல்.*
- *சட்ட நிறுவனமொன்றில் அல்லது சட்டத்தரணி ஒருவரின் கீழ் அதற்கு இணையான பதவியொன்றில் குறைந்தபட்சம் 03 ஆண்டு கால சேவையை பூர்த்தி செய்திருத்தல் விசேட தகைமையாக கருதப்படும்.*

**வயதெல்லை : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 30 வயதை விட குறைவாக இருத்தல் வேண்டும்.**

**பதவிக்குரிய விதிகளும் நிபந்தனைகளும்**

இந்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் வேட்பாளர்கள் முதலில் 02 ஆண்டு காலத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு சிறந்த செயலாற்றுகையின் பேரில் அவர்கள் நன்னடத்தை காலப்பகுதிக்கு உட்படுத்தப்படுவார்கள்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சிகரமான ஊதியங்கள் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் செயன்முறை**

மின்னஞ்சலின் விடய வரிசையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 05.06.2024ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் careers@hdfc.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் விபரங்களுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு கோரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவத்தை கொண்டிராத நபர்களுக்கு இந்த பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.
ஏற்புடைய தகைமைகளை பூர்த்தி செய்யாத நபர்களின் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைத்த விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.
நேர்முகப் பரீட்சையின் போது ஏற்புடைய கோப்புகளின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தவறும் விண்ணப்பதாரிகள் எக் காரணத்தினாலும் மேற்படி பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.
எந்தவொரு அழுத்தம் பிரயோகித்தலும் இப் பதவிக்கான தகைமை இழப்பாக கருதப்படும்.
ஆட்சேர்ப்புகளை பிற்போடுவதற்கான அல்லது ரத்துச் செய்வதற்கான உரிமை HDFC வங்கிக்கு உண்டு. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆட்சேர்ப்பு செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள்.

உதவிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்
HDFC வங்கி,
த.பெ. இல 2085,
சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02
தொலைபேசி இல - 0112 356800 - இணைய தள முகவரி : www.hdfc.lk